திரு. இரா. அண்ணாதுரை: ஒரு நிமிடம், உரையை முடித்துவிடுகிறேன். 5 ஆம் தேதி மாநில அரசு அனுமதி கேட்டது. இன்று வரையிலும் அனுமதியை மத்திய அரசாங்கம் வழங்கவில்லை. தமிழக அரசு அனுமதி கேட்ட பிறகு 9 தனியார் கேபிள் நிறுவனங்களுக்கு டிஜிட்டல் கேபிள் தொழில்நுட்பத்தைத் துவங்குவதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. ஆனால், நமது மாநில அரசாங்கத்தை வஞ்சிக்கக்கூடிய வகையில் மத்திய அரசு அனுமதி வழங்க மறுப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். உடனடியாக மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் இன்றைக்குக் கொடுக்கின்ற இடத்தில் இருக்கிறார்கள். இல்லையென்று சொன்னால் நாளைய தினம் கொடுக்கின்ற இடத்திலே இருக்க மாட்டார்கள். கேட்கின்ற இடத்திலேயும் இருக்க மாட்டார்கள். மக்கள் அவர்களை எந்த இடத்தில் வைப்பார்கள் என்றால், நாடாளுமன்றத் தேர்தலில் அவர்கள் புறக்கணிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

5. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மானியக் கோரிக்கை எண் 22–காவல் மற்றும் மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் 23–4–2013 அன்று மட்டும் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

6–5–2013 அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) 25–4–2013 அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை பேரவையின் ஒப்புதலோடு தெரிவித்துக்கொள்கிறேன்.